වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ANNUAL PERFORMANCE REPORT

2021



පරිවාස හා ළමාරක්ෂක සේවා දෙපාර්තමේන්තුව

බී කොටස, 3 වන මහල, සෙත්සිරිපාය II වන අදියර, බත්තරමුල්ල.

நன்னடத்தை, சிறுவர்பராமரிப்புச்சேவைகள்திணைக்களம்

பீபிரிவு, 3 ஆம்மாடி, செத்சிறிபாயகட்டம் II, பத்தரமுல்லை.

Department of Probation and Child Care Services

Section B, 3rd Floor, Stage II, Sethsiripaya, Battaramulla

2021 ஆம் ஆண்டுக்கான
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள்
செலவுத் தலைப்பு இல. : 217

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்,
பிரிவு பீ, 3 ஆம் மாடி, செத்சிரிபாய, கட்டம் II, பத்தரமுல்லை.

உள்ளடக்கம்

1.	**நிறுவனத்தின் விபரம் அமுல்படுத்தும் பொழிப்பு**	**1**
	1.1 அறிமுகம்	2
	1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, குறிக்கோள்	3
	1.3 பிரதான பணிகள்	4
	1.4 நிறுவன ஒழுங்கமைப்பு	5
	1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்	6
	1.6 வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்	6
2.	**முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு**	**7**
3.	**2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை**	**17**
	3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று	18
	3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று	21
	3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று	22
	3.4 நிதிக் கூற்றுக் குறிப்புகள்	24
	3.5 நிதி ஒதுக்கீடு பயன்பாட்டுச் செயலாற்றுகை	25
	3.6 நி.பி. 208 இற்கு அமைய வேறு அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்தத் திணைக்களம் / மாவட்ட செயலகங்கள் / மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு	26
	3.7 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை	28
	3.8 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	29
4.	**நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டு திட்டத்தின் அடிப்படையில்)**	**35**
5.	**பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகை**	**37**
	5.1 இனங்காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்	38
	5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைதல் வெற்றிகள் மற்றும் சவால்கள்	42
6.	**மனிதவளத் விபரம்**	**43**
	6.1 ஆளணி முகாமைத்துவம்	44
	6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறை தாக்கம் செலுத்தியுள்ள பாங்கு	44
	6.3 மனித வள அபிவிருத்தி	44
	6.4 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கான பயிற்சிகள் பங்களிப்புச் செய்யும் பாங்கு	46
7.	**இயைபு அறிக்கை**	**47**

01

நிறுவனத் தோற்றப்பாடு / அமுல்படுத்தல் பொழிப்பு

1.1 அறிமுகம்

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டுகளில் இலங்கையில் நீதிமன்றத்தினால் நன்னடத்தை முறை பரீட்சார்த்தமாக அமுல்படுத்தப்பட்டது. 1907 இல் இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்ட குற்றவாளிகள் தொடர்பான நன்னடத்தை கட்டளைச் சட்டம் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் தொடர்பிலும் தாக்கம் செலுத்தியது. 1944 இல் நிறைவேற்றப்பட்ட 22 ஆம் இலக்க நன்னடத்தை கட்டளைச் சட்டமானது மேலே குறிப்பிடப்பட்ட தாக்கங்களின் பெறுபேறாகும். இந்தக் கட்டளைச் சட்டத்தின் மூலம் நன்னடத்தை முறை இலங்கை நீதிமன்றங்களிலும் அமுலுக்கு வந்தது. இங்கிலாந்தின் நன்னடத்தைச் சேவைகள் ஊடாக இலங்கையிலும் நன்னடத்தைச் சேவைகளை ஆரம்பிக்கும் செயற்பணி, இங்கிலாந்தின் மதியுரையாளரான திரு எச்.ஏ. லீடினிடம் பொறுப்பளிக்கப்பட்டது. அதற்கமைய சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட நன்னடத்தைச் சேவைகள் சில நன்னடத்தை அலுவலர்கள் ஊடாக ஆரம்பமானது. பரீட்சார்த்தமாக நாட்டிலுள்ள ஒரு சில நீதிமன்ற பிரிவுகளில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்ட பின்னர் இந்த சேவை நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனையடுத்து இச்சேவையை மேம்படுத்த வேண்டிய தேவையும் எழுந்தது.

1949 இல் நீதிபதி திரு. கிறேசியனின் தலைமையில் நியமனம் செய்யப்பட்ட குழுவின் விதந்துரைகள் அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து நாடு முழுவதும் சகல நீதிமன்ற வலயங்களும் உள்ளடக்கப்படும் வகையில் நன்னடத்தைச் சேவை விஸ்தரிக்கப்பட்டது. இந்த சேவையின் நிர்வாக நடவடிக்கைகள் சிறைச்சாலை மற்றும் நன்னடத்தைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

சிறுவர்கள் மற்றும் இளவயதினர் கட்டளைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை மற்றும் சிறுவர் நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சிறுவர்களுக்கு ஆற்றப்படும் சேவைகளை ஒன்றுதிரட்ட வேண்டிய முக்கியத்துவம் தொடர்பாக திரு. சிறில் ஹெம்லீனின் அறிக்கையினூடாக சுட்டிக்காட்டப்பட்டது. மேற்படி விதந்துரைக்கு அமைய 1956 அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தடுப்பு இல்லங்கள், சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகள், நன்னடத்தை அலுவலகங்கள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களின் நடவடிக்கைகள் நன்னடத்தை திணைக்களத்தின் கீழ் விஸ்தரிக்கப்பட்டதுடன், நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் உதவி ஆணையாளர்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளருக்கு உதவுவதற்காக நியமனம் செய்யப்பட்டார்கள்.

1987 இல் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அமுலுக்கு வந்ததையடுத்து, மேற்படி ஒழுங்கமைப்பு மாற்றமடைந்தது. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவையானது, மாகாண சபைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்டது. அத்துடன் அதுவரை ஆணையாளருக்கு உதவுவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த உதவி ஆணையாளர் பதவிகளும் இரத்துச் செய்யப்பட்டன. மாகாண சபைகளின் கீழ் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர்கள் சகல மாகாணங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டார்கள் என்பதுடன், அவர்களின் கண்காணிப்பின் கீழ் நன்னடத்தை அலுவலகங்கள் கொண்டுவரப்பட்டன.

1991 ஆம் ஆண்டு இலங்கை சிறுவர் உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தில் கைச்சாத்திட்டது. 1992 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது. அந்த சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் காணப்படுகின்ற யாப்புக்களை அமுல்படுத்த வேண்டியதன் தேவைக்காக 1999 ஆம் ஆண்டு திணைக்களம் தனது வெளிக்கள கடமைகளை நிறைவேற்றுவதற்காக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் எனும் புதிய பதவி உருவாக்கப்பட்டு அதற்கு அலுவலர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள். தற்போது இவர்கள் நாடு முழுவதும் அமைந்துள்ள மாவட்ட மற்றும் பிரதேச

செயலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்றனர். இதனூடாக நன்னடத்தை விடயம் மற்றும் சிறுவர் பராமரிப்பு விடயத்திற்கு முன்னுரிமை வழங்கி செயற்த்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

1956 இல் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களம் முதலில் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அடிக்கடி பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இதனைக் கொண்டு வந்தன. 1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இந்த திணைக்களம் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 1994 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் சுகாதார, பெருந்தெருக்கள், சமூக சேவைகள் அமைச்சின் கீழும், 2001 ஆம் ஆண்டில் சமூக சேவைகள், மீனவர் சமுதாய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழும், 2002 இல் சுகாதார போசாக்கு, நலன்புரி அமைச்சின் கீழும், 2003 இல் சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 2004 ஆம் ஆண்டில் மகளிர் அபிவிருத்தி, சமூக நலன்புரி அமைச்சின் கீழும், 2005 ஆம் ஆண்டு முதல் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அபிவிருத்தி அமைச்சின் கீழும், 2010 ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் கீழும் 2015 ஆம் ஆண்டிலிருந்து மகளிர் அபிவிருத்தி மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழும், 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் கீழும், 2021 ஆண்டிலிருந்து பெண்கள், சிறுவர் விவகார மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் கீழும், 2020 ஆம் ஆண்டிலிருந்து பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சின் கீழும் செயற்பட்டு வருகின்றது.

1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்

நோக்கு

சிறுவர்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட்ட, அவர்கள் தொடர்பில் உணர்வுப்பூர்வமான சமூகம்.

பணிக்கூற்று

தேசிய கொள்கைகள், சர்வதேச நியமங்களுக்கு அமைய அநாதைகள், கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான சிறுவர்களையும் சட்ட ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களையும் விசேடமாகக் கருதி சகல சிறுவர்களினது உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு சமமான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தல்.

குறிக்கோள்


- சட்டத்துடன் முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல்.
- அநாதைகளான, கைவிடப்பட்ட மற்றும் அநாதரவான சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.
- சட்ட ரீதியான சிக்கல்களை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
- சிறுவர் உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளை ஒருங்கிணைப்புச் செய்து அவர்களது விதந்துரைகளின் அடிப்படையில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக தற்போது அமுலிலுள்ள சட்டங்களை தேசிய மற்றும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடையவாறு திருத்தம் செய்தல்.
- மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப அறிவு மற்றும் சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.
- சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- தற்போதுள்ள உள்ளக சொத்துக்களின் முகாமைத்துவ முறைகளை மேம்படுத்தல்.
- மக்களின் தேவைகளை திருப்திப்படுத்தக்கூடிய வினைத்திறனான சேவையை ஆற்றுதல்.
- சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக வினைத்திறனாக பணியாற்றக்கூடிய ஆளணியை பயிற்றுவித்தல்.

1.3. முக்கிய பணிகள்

- மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களங்களுடன் ஒருங்கிணைப்பு செய்தல்.
- வெளிநாட்டு மகவேற்புகள்
- சிறுவர்களின் கல்வி உரிமைகளை உறுதி செய்வதற்கான செயற்திட்டங்கள்
    - செவன சரண பெற்றோர் பாதுகாவலர் திட்டத்தின் மூலம் அநாதரவான சிறுவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்
    - நென திரிய புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிகளை அமுல்படுத்தல்
    - கெப்பக்கரு தெகுரு பெற்றோர் பாதுகாவலர் உதவித் திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கு கல்வி உதவிகளை வழங்குதல்.

- சிறுவர் உரிமைகளை உறுதி செய்வதற்கான சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை நிறுவுதல் மற்றும் வலுவூட்டல்.
- சிறுவர்களின் பங்கேற்பு உரிமையை உறுதி செய்வதற்கான சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபை செயற்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பயிற்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகள்.
- உளவளத்துணை தேவையான, சட்டத்துடன் மோதல்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள சிறுவர்களுக்காக பரத்த (ஒரு ஊரின் பெயர்) சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவை தேசிய நிலையத்தை இயக்குதல்.

1.4 நிறுவன ஒழுங்கமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

இலங்கை நிர்வாக சேவைக்கு உரிய இரண்டு பிரதி / உதவி ஆணையாளர்கள் திணைக்களம்சார் உதவி ஆணையாளர், ஒரு கணக்காளர், ஒரு சட்ட அலுவலர், ஒரு நிர்வாக அலுவலர், ஒரு சிரேஷ்ட நன்னடத்தை அலுவலர், ஒரு நன்னடத்தை அலுவலர் மற்றும் இருநூற்று முப்பத்திரண்டு சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களை உள்ளடக்கிய ஆளணியினரின் உதவியுடன் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் செயற்பணிகளை நிறைவேற்றும் பொறுப்பை ஆணையாளர் கொண்டுள்ளார்.

திணைக்கள ஒழுங்கமைப்புக்கு உரித்தான பிரிவுகள்:

1. தாபன மற்றும் நிர்வாகப் பிரிவு
2. கணக்கு பிரிவு
3. நன்னடத்தைப் பிரிவு
4. அபிவிருத்திப் பிரிவு
5. பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் தேசிய நிலையம்

1.6 வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்

(அ) கருத்திட்டத்தின் பெயர் : சிறுவர் பாதுகாப்புக்கான செயற்பாட்டு திட்டம்

(ஆ) பங்களிப்புச் செய்யும் முகவர் நிறுவனம் : சேவ் த சில்ரன் நிறுவனம்

(இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவீனம் - ரூபா 20.612 மில்லியன்

(ஈ) கருத்திட்டக் கால எல்லை : 4 ஆண்டுகள்

(அ) கருத்திட்டத்தின் பெயர் : யுனிசெப் செயற்பாட்டு திட்டம் 2021/22

(ஆ) பங்களிப்புச் செய்யும் முகவர் நிறுவனம் : யுனிசெப்

(இ) கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவீனம் - ரூபா 4,190,000.00

(ஈ) கருத்திட்டக் கால எல்லை : 2 ஆண்டுகள்

02
முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்

செயற்பாட்டு திட்டத்தின் முன்னேற்றம் (மூலதனக் கருத்திட்டங்கள்) - 2021

செலவு விபரம் (A)	கருத்திட்டத்தின் பெயர் (B)	பௌதீக வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி	வேலைகளை பூர்த்தி செய்ய உத்தேசித்த திகதி	கருத்திட்ட பெறுபேறு	பிரதான செயலாற்றுகை சுட்டி	மொத்த செலவு மதிப்பீடு (ரூ.மில்)	நிதி முன்னேற்றம் (ரூ.மில்.)	நிதிசார் முன்னேற்றம் (%)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றம் (%)
217 -2 -2 - 3 - 2202	சிறுவர் இல்ல புனரமைப்பு	01.01.2021	31.12.2021	5 சிறுவர் இல்லங்கள்	புனரமைக்கப்பட்ட சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை	4.000	4.000	100	5 சிறுவர் இல்லங்கள்	5 சிறுவர் இல்லங்கள்	100
	மொத்தம்					**4.000**	**4.000**				
217 -2 -2 - 4 - 2202	சிறுவர் இல்ல கண்காணிப்புகள் மூலம் அடையாளம் காணப்பட்ட தேவைகளுக்காக மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் ஆகக்குறைந்த தரத்தை பேணுவதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு நிதி மானியம் வழங்குதல்.	01.01.2021	31.12.2021	5 சிறுவர் இல்லங்கள்	புனரமைக்கப்பட்ட சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை	2.7210	2.7210	100	5 சிறுவர் இல்லங்கள்	5 சிறுவர் இல்லங்கள்	100

	இனங்காணப்பட்ட சிறுவர்களை சமூகமயப்படுத்தல்	01.01.2021	31.12.2021	சமூமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள் 5	சமூமயப்படுத்தப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை	0.3500	0.3490	99.7	சமூமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள் 5	சமூமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள் 5	100
	சிறுவர்களை பராமரிக்கும் அலுவலர்களை பயிற்றுவித்தல் மற்றும் உளவளத்துணை சேவை நிலையங்களில் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு ஒழுங்குவிதிகளை தயாரிததல்.	01.01.2021	31.12.2021	14 பயிற்சிகள்	பயிற்சிகளின் எண்ணிக்கை	0.7910	0.6924	87.5	14 பயிற்சிகள்	14 பயிற்சிகள்	100
	உறவினர்கள் அல்லாத தாபரிப்பு குடும்பங்களை அடையாளம் காண்பதற்கான புதிய சட்டங்களை தயாரித்தல். (பிள்ளைகளை மகவேற்பு செய்யும் கட்டளை சட்டத்தை திருத்தம் செய்தல்.)	01.01.2021	31.12.2021	தொடர்புடைய சட்டங்களை தயாரித்தல் / அளவுகோல்களை விருத்தி செய்தல்.	தயாரிக்கப்பட்ட சட்டங்கள் / விருத்தி செய்த அளவுகோல்கள்.	0.000	0.000	0	தயாரிக்கப்பட்ட சட்டங்கள் / விருத்தி செய்த அளவுகோல்கள்.	தயாரிக்கப்பட்ட சட்டங்கள் / விருத்தி செய்த அளவுகோல்கள்.	100
	நிறுவன சிறுவர்களுக்கு NVQ பயிற்சி வழங்குதல்.	01.01.2021	31.12.2021	2 பயிற்சி நிலையங்கள்	NVQ பயிற்சி நிலையங்கள்	0.300	0.300	100	2 பயிற்சி நிலையங்கள்	2 பயிற்சி நிலையங்கள்	100

	நன்நடத்தை அலுவலர்கள் மற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்களுக்கு நன்நடத்தைக்கு உட்படுத்துதலுடன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் மனித கடத்தல் தொடர்பான பயிற்சிகளை நடத்துதல்.	01.01.2021	31.12.2021	3 பயிற்சிகள்	3 பயிற்சிகளின் எண்ணிக்கை	0.338	0.286	84.5	3 பயிற்சிகள்	3 பயிற்சிகள்	100
	மொத்தம்					**4.500**	**4.348**				
217-2-2-5-2202	நல்ல பெற்றோரியம் மற்றும் பிள்ளைகளின் நற்பண்புகள் பழக்கப்படுத்துதல் தொடர்பான பெற்றோரின் ஆற்றல்களை மெருகூட்டும் நிகழ்ச்சிகள் மற்றும் பிள்ளைகளின் விழுமியங்களை விருத்தி செய்தல் தொடர்பான ஆற்றல் விருததி பயிற்சிகள்.	01.01.2021	31.12.2021	5 நிகழ்ச்சிகள்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை / பங்குபற்றியோர் தொகை	0.935	0.935	100	5 நிகழ்ச்சிகள்	5 நிகழ்ச்சிகள்	100
	அச்சுறுத்தலான நிலையிலுள்ள சிறுவர்கள் உள்ள குடும்பங்களுக்கு பாதுகாப்பு திட்டம் ஊடாக நிதி மற்றும் நிதி சாரா	01.01.2021	31.12.2021	400 பாதுகாப்பு திட்டங்கள்	பாதுகாப்பு திட்டங்களின் எண்ணிக்கை / பயன்பெற்ற சிறுவர்களின் எண்ணிக்கை	11.670	11.447	98.1	400 பாதுகாப்பு திட்டங்கள்	400 பாதுகாப்பு திட்டங்கள்	93.5

	நன்மைகளை வழங்குதல்.										
	சிறுவர்களுக்கான திடீர் விபத்து மற்றும் அனர்த்த பதில்வினையாற்றல்	01.01.2021	31.12.2021	450 பிள்ளைகள்	பிள்ளைகளின் எண்ணிக்கை	1.2205	1.163	95.3	450 பிள்ளைகள்	450 பிள்ளைகள்	100
	சிறுவர் இல்லங்களில் உள்ள (பரத்த) பிள்ளைகளை பயிற்றுவித்தல் / ஆற்றல் விருத்தி / திறன் விருத்தி நிகழ்ச்சிகளை நடத்துதல்.	01.01.2021	31.12.2021	14 பிள்ளைகள்	பயன்பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை	0.294	0.294	100	14 பிள்ளைகள்	14 பிள்ளைகள்	100
	திறன்விருத்தி அதிகாரசபையின் உதவியுடன் சிறுவர்களுக்கு NVQ சான்றிதழ் வழங்கும் நிலையமாக மேம்படுத்துதல்.	01.01.2021	31.12.2021	1 நிலையம்	பணி நிறைவு %	0.551	0.5510	100	1 நிலையம்	1 நிலையம்	100
	சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபை யாப்பு திருத்தம் செய்தல். (யாப்பு அச்சிடுதல்)	01.01.2021	31.12.2021	திருத்தம் செய்யப்பட்ட யாப்பு பிரதிகள் - 500	திருத்தம் செய்யப்பட்ட யாப்பு / கூட்டங்களின் எண்ணிக்கை / அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை	0.000	0.000	0	திருத்தம் செய்யப்பட்ட யாப்பு பிரதிகள் - 500	திருத்தம் செய்யப்பட்ட யாப்பு பிரதிகள் - 500	100

	சினேகபூர்வமான சூழலை உருவாக்குவதற்காக பிள்ளைகளை வலுவூட்டுதல் - சிறுவர் அடிப்படை ஆய்வுகள்	01.01.2021	31.12.2021	8 ஆய்வுகள்	மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை	0.216	0.1455	67.4	8 ஆய்வுகள்	8 ஆய்வுகள்	75
217-2-2-5-2202	சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபை கூட்டங்களை நடத்துதல் - பிரதேச மட்டம்	01.01.2021	31.12.2021	325 கூட்டங்கள்	கூட்டங்களின் எண்ணிக்கை	0.8140	0.7929	97.4	325 கூட்டங்கள்	341 கூட்டங்கள்	100
	சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபை கூட்டங்களை நடத்துதல் - மாவட்ட மட்டம்	01.01.2021	31.12.2021	25 கூட்டங்கள்	கூட்டங்களின் எண்ணிக்கை	0.0625	0.0624	99.8	25 கூட்டங்கள்	33 கூட்டங்கள்	100
	தேசிய சிறுவர் சபை	01.01.2021	31.12.2021	1 கூட்டம்	கூட்டங்களின் எண்ணிக்கை	0.000	0.000	0	1 கூட்டம்	1 கூட்டம்	100
	சிறுவர் சபை உறுப்பினர்கள் மற்றும் வசதிபடுத்துனர்களுக்கான விஷேட நிகழ்ச்சிகள்	01.01.2021	31.12.2021	4 கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை	0.080	0.080	100	4 கருத்திட்டங்கள்	4 கருத்திட்டங்கள்	100
	சிறுவர் கழகங்கள் மற்றும் சிறுவர் சபை பிள்ளைகளின் "நிமிதெற சஞ்சிகை"	01.01.2021	31.12.2021	25 சஞ்சிகைகள்	சஞ்சிகைகளின் எண்ணிக்கை	0.625	0.600	96	25 சஞ்சிகைகள்	24 சஞ்சிகைகள்	96
	அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பான தேசிய செயற்பாட்டு குழுவுக்கு புதிய	01.01.2021	31.12.2021	நிறுவப்பட்ட தேசிய செயற்பாட்டு குழு / 1	நிறுவப்பட்ட தேசிய செயற்பாட்டு குழு / கூட்டங்களின்	0.000	0.000	0	நிறுவப்பட்ட தேசிய செயற்பாட்டு குழு / 1 கூட்டம்	நிறுவப்பட்ட தேசிய செயற்பாட்டு குழு / 1 கூட்டம்	100

	உறுப்பினர்களை நியமித்தல் மற்றும் அந்த கூட்டங்களை நடத்துதல்.			கூட்டம்	எண்ணிக்கை						
	சிறுவர் அபிவிருத்தி குழு தொடர்பான வழிகாட்டலில் காட்டப்பட்டுள்ள கடமைகளை கிராம அலுவலர்களின் கடமை பட்டியலில் சேர்ப்பதற்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்தை பெறுதல் மற்றும் அதற்கமைய சுற்றறிக்கை வெளியிடுதல்.	01.01.2021	31.12.2021	அங்கீகரித்தல். / கடிதம் வெளியிடுதல்.	அங்கீகரித்தல். / கடிதம் வெளியிடுதல்.	0.000	0.000	0	அங்கீகரித்தல். / கடிதம் வெளியிடுதல்.	அங்கீகரித்தல். / கடிதம் வெளியிடுதல்.	100
	சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரதேச செயற்பாட்டு குழு கூட்டம் நடத்துதல்.	01.01.2021	31.12.2021	394 கூட்டங்கள்	நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	0.986	0.9727	98.6	394 கூட்டங்கள்	402 கூட்டங்கள்	100
	மாகாண கூட்டம்	01.01.2021	31.12.2021	3 கூட்டங்கள்	நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	0.008	0.008	97.5	3 கூட்டங்கள்	3 கூட்டங்கள்	100
	மாதிரி கிராமங்களுக்காக நிகழ்ச்சிகளை நடத்துதல்	01.01.2021	31.12.2021	25 மாதிரி கிராமங்கள்	மாதிரி கிராமங்களின் எண்ணிக்கை	2.3705	1.7540	73.9	25 மாதிரி கிராமங்கள்	21 மாதிரி கிராமங்கள்	84
	இணையவெளியில் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக	01.01.2021	31.12.2021	139 நிகழ்ச்சிகள்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	0.6945	0.5840	84.1	139 நிகழ்ச்சிகள்	120 நிகழ்ச்சிகள்	86.3

	பெற்றோரை தெளிவூட்டுதல்.										
	ஒரங்கட்டப்பட்ட சமூக பிள்ளைகளுக்காக நடமாடும் சேவை நடத்துதல் மற்றும் சட்ட ரீதியான ஆவணங்களை வழங்குதல்.	01.01.2021	31.12.2021	36 நிகழ்ச்சிகள்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை / பயனாளி பிள்ளைகளின் எண்ணிக்கை	1.000	1.000	99.9	36 நிகழ்ச்சிகள்	36 நிகழ்ச்சிகள்	100
	பாதகமான சமூகங்கள் தொடர்பில் மாவட்ட / பிரதேச மட்டத்தில் சமரப்பிக்கப்பட்ட திட்ட முன்மொழிவுகளுக்கு நிதி நிவாரணம் வழங்குதல்.	01.01.2021	31.12.2021	32 நிகழ்ச்சிகள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை / நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	0.600	0.600	100	32 நிகழ்ச்சிகள்	32 நிகழ்ச்சிகள்	100
	பண்டாரநாயக்கபுர வீதி சிறுவர்களுக்காக நடத்தப்படும் மாலைநேர பராமரிப்பு நிலையத்துக்கு வசதிகளை வழங்குதல்.	01.01.2021	31.12.2021	19 நிகழ்ச்சிகள்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை / பயனாளி பிள்ளைகளின் எண்ணிக்கை	0.420	0.420	100	19 நிகழ்ச்சிகள்	19 நிகழ்ச்சிகள்	100
	முன்னேற்ற மீளாய்வு கூட்டம் (தேசிய, மாவட்ட) மற்றும் சஹன் எலிய நிகழ்ச்சி	01.01.2021	31.12.2021	234 கூட்டங்கள	கூட்டங்களின் எண்ணிக்கை	1.2750	1.2559	98.5	234 கூட்டங்கள	269 கூட்டங்கள	100
	திட்டமிடல் மற்றும் முன்னேற்ற மேற்பார்வை தந்திரோபாயம் தொடர்பான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகள்.	01.01.2021	31.12.2021	1 நிகழ்ச்சி	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	0.2600	0.2600	100	1 நிகழ்ச்சி	1 நிகழ்ச்சி	100

	தற்போதுள்ள பொறிமுறை (செயலாற்றுகை அறிக்கை) மூலம் அலுவலர்களின் செயலாற்றுகையை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல்.	01.01.2021	31.12.2021	500 கடமை நாட்குறிப்பேடுகள்	அச்சிடப்பட்ட கடமை நாட்குறிப்பேடுகளின் எண்ணிக்கை	0.376	0.3760	100	500 கடமை நாட்குறிப்பேடுகள்	500 கடமை நாட்குறிப்பேடுகள்	100
	சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்ட நிகழ்ச்சிகள் மற்றும் அச்சிடல் மற்றும் பிரச்சார செயற்பாடுகள்	01.01.2021	31.12.2021	363 நிகழ்ச்சிகள்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	5.542	5.542	100	363 நிகழ்ச்சிகள்	363 நிகழ்ச்சிகள்	100
	மொத்தம்					**30.000**	**28.844**				
217-2-2-6-2202	அவ்வப்போது பாடசாலை செல்லும் அல்லது பாடசாலையிலிருந்து இடைவிலகும் அச்சுறுத்தல் உள்ள பிள்ளைகளுக்கு கல்வி உதவி வழங்குதல்.	01.01.2021	31.12.2021	1943 பிள்ளைகள்	பயன்பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை	1.962	1.9539	99.6	1943 பிள்ளைகள்	1935 பிள்ளைகள்	99.6
	கெப்பகரு தெகுரு	01.01.2021	31.12.2021	2000 பிள்ளைகள்	பிள்ளைகளின் எண்ணிக்கை	16.800	16.7244	99.5	2000 பிள்ளைகள்	2000 பிள்ளைகள்	100
	மருத்துவ மற்றும் போசாக்கு உதவி வழங்குதல்.	01.01.2021	31.12.2021	554 பிள்ளைகள்	பயன்பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை	3.000	2.9754	99.2	554 பிள்ளைகள்	550 பிள்ளைகள்	99.2
	இரட்டை குழந்தைகளுக்கான உதவி வழங்கும் திட்டம்.	01.01.2021	31.12.2021	323 குடும்பங்கள்	பயன்பெற்ற பிள்ளைகளின்	2.5575	2.5200	98.5	323 குடும்பங்கள்	318 குடும்பங்கள்	98.4

					எண்ணிக்கை						
	வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான உதவிகள்.	01.01.2021	31.12.2021	22 பிள்ளைகள்	பயன்பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை	0.5259	0.5186	98.6	22 பிள்ளைகள்	22 பிள்ளைகள்	100
	சேனகச உதவி (சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு)	01.01.2021	31.12.2021	9 பிள்ளைகள்	பயன்பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை	0.117	0.117	100	9 பிள்ளைகள்	9 பிள்ளைகள்	100
	விபத்துக்களால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அவசர உதவிகளை வழங்குதல்.	01.01.2021	31.12.2021	69 பிள்ளைகள்	பயன்பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை	0.345	0.330	95.6	69 பிள்ளைகள்	66 பிள்ளைகள்	95.6
	திடீர் விபத்துக்களால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு பதில்வினையாற்றுதல்.	01.01.2021	31.12.2021	400 பிள்ளைகள்	பிள்ளைகளின் எண்ணிக்கை	0.6066	0.5971	98.4	400 பிள்ளைகள்	400 பிள்ளைகள்	100
	சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் பிள்ளைகளின் தலையீட்டை பலப்படுத்துதல்.	01.01.2021	31.12.2021	2 கருத்திட்டங்கள்	கருத்திட்டங்களின் எண்ணிக்கை / பிள்ளைகளால் ஆரம்பிக்கப்பட்ட தலையீடுகள்	0.086	0.0860	100	2 கருத்திட்டங்கள்	2 கருத்திட்டங்கள்	100
	உப மொத்தம்					**26.000**	**25.822**				
	முழு மொத்தம்					**64.500**	**63.014**				

03

2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்த ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை கூற்று

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகை கூற்று

பாதீடு 2021 ரூ.		குறிப்பு	உண்மை நிலை 2021 ரூ.	மீண்டும் சீர் செய்யப்பட்ட 2020 ரூ.	
-	**வருமான பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ -1
-	உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானம் மற்றும் ஏனையவை	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	வருமானம் அல்லாத பெறுகைகள்		-		
-	திறைசேரி கட்டுநிதி		323,268,000	302,919,000	ஏசீஏ -3
-	வைப்புகள்		1,592,875	2,318,063	ஏசீஏ -4
-	முற்பணக் கணக்குகள்		13,386,895	10,149,091	ஏசீஏ -5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ))**		**338,247,770**	315,386,154	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் (அ)+(ஆ) இ =**		**338,247,770**	315,386,154	
	திறைசேரிக்கு அனுப்பிய தொகை (இ)		2,972,646	-	

	தேறிய வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் உ = (இ)+(ஈ)		335,275,124	315,386,154	
	கழித்தல் : செலவினம்				
-	**மீண்டெழும் செலவினம்**		-	-	
293,800,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	**5**	295,670,326	287,092,775	
36,950,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	**6**	34,166,182	31,663,030	
5,750,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	**7**	4,033,241	5,185,070	ஏசீஏ -2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவீனம்	**9**	-	-	
336,500,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)**		**333,869,749**	323,940,875	
	மூலதனம் செலவினம்				
300,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பு மற்றும் மேம்படுத்தல்	**10**	163,165	68,795	
3,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	**11**	2,631,358	2,116,052	
64,500,000	மூலதன மாற்றல்கள்	**12**	63,019,079	32,673,380	ஏசீஏ 2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	**13**	-	-	
1,400,000	ஆற்றல் அபிவிருத்தி	**14**	1,398,624	290,887	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	**15**	-	-	
69,200,000	**மொத்த மூலதனம் செலவினம் (உ)**		**67,212,226**	35,149,114	
	வைப்புக் செலுத்துகைகள்		1,361,924	2,371,146	ஏசீஏ -4
	முற்பணக் கொடுப்பனவுகள்		12,365,939	4,110,675	ஏசீஏ -5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கு செலுத்துகைகள்		-	-	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)		13,727,863	6,481,821	

405,700,000	**மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)**	414,809,838	365,571,810	
-	**டிசம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ஏ = (இ-எ)**	(79,534,714)	(50,185,656)	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி	(79,534,714)	(50,185,656)	**ஏசீஏ -7**
			-	**ஏசீஏ -3**
		-	-	

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	81,571,822	75,401,864
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	35,497,196	36,518,152
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**117,069,018**	**111,920,016**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		35,214,482	36,466,388
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		81,571,822	75,401,864
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	282,714	51,764
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**117,069,018**	**111,920,016**

பக்க இலக்கம் 09 முதல் 51 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 52 முதல் 67 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்காளர் / பணிப்பாளர் (நிதி) / ஆணையாளர் (நிதி)
பெயர்:	பெயர்:	பெயர்:
பதவி :	பதவி :	திகதி : 28/02/2022
திகதி :	திகதி :	
K.M.S.D. Jayasekara State Secretary State Ministry of Women and Child Development Pre-School & Primary Education. School Infrastructure & Education Services 5th Floor. Sethsiripaya - Stage II Battaramulla	Sudeera Nilanga Withana Deputy Commissioner Department of Probation & Child Care Services Wing B, 3rd Floor, Sethsiripaya - Stage II Battaramulla	R. A. J. Dilrukshi Accountant Department of Probation & Child Care Services 3rd Floor , Sethsiripaya - 2nd Stage, Battaramulla.

3.3 காசு பாய்ச்சல் தொடர்பான கூற்று

ஏசீஏ – சீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசு பாய்ச்சல் கூற்று

	உண்மையான	மீண்டும் சீர் செய்யப்பட்ட
	2021	2020
	ரூ.	ரூ.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		-
மொத்த வரி பெறுகை	-	-
கட்டணம், மிகைக் கட்டணம், அபராதம் மற்றும் உரிமம்	-	-
இலாபம்	-	
வருமானம் அல்லாத பெறுகை	-	164,931
ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	21,523,051.00	16,897,663
கட்டுநிதி பெறுகை	323,268,000	302,919,000
முற்பண அறவீடு செய்தல்	11,824,086	9,718,450
வைப்பு பெறுகை	1,592,875	2,318,063
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (அ)	**358,208,012**	**332,018,107**
கழித்தல் : நிதி செலவிடல்		
நபர்களுக்கான வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டு செலவினம்	320,335,710	309,964,063
நிவாரண உதவி மற்றும் மாற்றல் செலவினங்கள்	4,033,241	5,185,070
வேறு செலவினத் தலைப்புக்களுக்கான செலவினங்கள்	205,722	2,427,195
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட கட்டுநிதி	2,972,646	164,931
முற்பணம் செலுத்துகை	11,368,390	3,295,324
வைப்பு செலுத்துகை	1,361,924	2,371,146
செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் (ஆ)	**340,277,633**	**323,407,729**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் (இ) = (அ) – (ஆ)	**17,930,379.00**	**8,610,378**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		
வட்டி	-	-
இலாபப் பங்கு	-	-
உரித்து நீக்க ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்து விற்பனை	-	-

உப கடன் அறவீடு	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் (இ)	**-**	**-**
கழித்தல் : காசு செலவிடல்		
பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கையகப்படுத்துதல்.	17,930,379	8,610,378
முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப்பாய்ச்சல் (உ)	**17,930,379**	**8,610,378**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் உ = (இ) – (-எ)	(17,930,379)	(8,610,378)
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் உ = (இ) + (-எ)	-	-
செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன் மீளச் செலுத்தல்	-	-
வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்தல்	-	-
கொடைகள் பெறுகை	-	-
நிதி நடவடிக்கைகளுக்காக உருவான மொத்தக் காசுப்பாய்ச்சல் (ஐ)	**-**	**-**
கழித்தல் : காசு செலவிடல்		
உள்நாட்டுக் கடன் மீளச் செலுத்தல்	-	-
வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்தல்	-	-
நிதி நடவடிக்கைகளுக்காக உருவான மொத்தக் காசுப்பாய்ச்சல் (ஒ)	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (ஒ) = (ஏ) – (ஐ)	-	-
காசில் தேறிய மாற்றம் (ஐ) = (எ) – (ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதிக்கான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31 ஆம் திகதிக்கான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

அறிக்கையிடலுக்கான அடிப்படை

1.அறிக்கையிடல் காலப்பகுதி

இந்த நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2021 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2.அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்
நிதிக் கூற்றுகள் இலங்கை ரூபாவுக்கு கிட்டிய ரூபாயில் தயாரிக்கப்பட்டுள்ளது.

3.வருமானத்தை அடையாளங்காணுதல்

பரிமாற்ற மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளம் காணப்படுகின்றது

4. சொத்து, பொறிகள் மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன
கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5. சொத்து, பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த ஒதுக்கீட்டுக் கணக்கு சொத்து, பொறிகள் மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6. காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

7. நிதிக்கூற்று மாதிரிப்படிவங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடாக பெறுமானங்களை மீள சீராக்குதல்.

2021 ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்கு அமைய 2020 ஆண்டுக்கான ஒப்பீட்டு ரீதியான புள்ளிவிபரங்களில் பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.5 செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை பாவிப்பதன் செயலாற்றுகை

நிதி ஒதுக்கீட்டு வகை	மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு		உண்மையான செலவு	பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட இறுதி நிதி ஒதுக்கீட்டு அளவு (%)
	ஆரம்ப நிதி ஒதுக்கீடு	இறுதி நிதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	336,500,000	336,500,000	333,869,749	99%
மூலதன	69,200,000	69,200,000	67,212,226	97%

3.6 நி.பி. 208 இற்கமைய, வேறு அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதியாக இத் திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட ஏற்பாடுகள்

3.6-1 மாவட்டம்
217-2-2-5-2202, 217-2-2-6-2202

தொடர் இலக்கம்	நிதி ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு / திணைக்களம்	நிதி ஒதுக்கீட்டின் நோக்கம்	2021 நிதி ஒதுக்கீடு		உண்மையான செலவு	பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட இறுதி நிதி ஒதுக்கீட்டு அளவு (%)
			ஆரம்ப நிதி ஒதுக்கீடு	இறுதி நிதி ஒதுக்கீடு		
1	கொழும்பு	பாதகமான நிலையிலுள்ள பிள்ளைகளின் உரிமைகளை உறுதி செய்தல் மற்றும் தொழிற்பயிற்சி, நிதியுதவிகளை வழங்குவதன் மூலம் அல்களை வலுவூட்டுதல்	2,222.249	2,222.249	2,206.260	99.3
2	கம்பஹா		2,832.055	2,832.055	2,824.949	99.7
3	களுத்துறை		3,155.911	3,155.911	2,991.192	94.8
4	காலி		2,246.491	2,246.491	2,241.888	99.8
5	மாத்தறை		1,958.000	1,958.000	1,912.755	97.7
6	அம்பாந்தோட்டை		2,168.490	2,168.490	2,146.323	98.9
7	அனுராதபுரம்		2,136.350	2,136.350	2,127.380	99.6
8	பொலநறுவை		972.445	972.445	966.643	99.4
9	குருணாகல்		4,618.116	4,618.116	4,581.072	99.2
10	புத்தளம்		971.650	971.650	971.592	99.9
11	கண்டி		6,133.664	6,133.664	6,120.652	99.8
12	மாத்தளை		1,187.899	1,187.899	1,128.203	94.9
13	நுவரெலியா		887.700	887.700	876.660	98.7
14	இரத்தினபுரி		3,220.765	3,220.765	2,752.025	85.4
15	கேகாலை		2,222.850	2,222.850	2,063.604	92.8
16	மொனராகல		1,861.760	1,861.760	1,849.136	99.3
17	பதுளை		3,499.100	3,499.100	3,465.898	99.0

18	யாழ்ப்பாணம்		1,334.100	1,334.100	1,329.100	99.6
19	வவுனியா		439.900	439.900	418.991	95.2
20	மன்னார்		275.500	275.500	177.180	64.3
21	முல்லைத்தீவு		157.400	157.400	151.880	96.5
22	கிளிநொச்சி		294.400	294.400	293.300	99.6
23	ஆம்பாறை		1,900.700	1,900.700	1,869.616	98.4
24	மட்டக்களப்பு		1,464.600	1,464.600	1,409.631	96.2
25	திருகோணமலை		728.500	728.500	688.420	94.5
	மொத்தம்		**48,890.595**	**48,890.595**	**47,564.350**	**97.3**

3.6 – 2 மாகாண சபைகள்

217-2-2-3-2202, 217-2-2-4-2202, 217-2-2-5-2202


தொடர் இலக்கம்	நிதி ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு / திணைக்களம்	நிதி ஒதுக்கீட்டின் நோக்கம்	நிதி ஒதுக்கீடு		உண்மையான செலவு	இறுதி விகிதமாக நிதி ஒதுக்கீட்டு பயன்பாடு
			ஆரம்பம்	இறுதி		
1	மத்திய	சிறுவர் இல்ல புனரமைப்பு செய்தல், மேற்பார்வை மற்றும் பராமரிப்பாளர்களுக்கான பயிற்சி வழங்குதல், அடையாளம் காணப்பட்ட சிறுவர்களை சமூகமயப்படுத்துதல், சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களு	890,054.82	890,054.82	890,054.82	100
2	வடமேல்		168,190.00	168,190.00	168,190.00	100
3	சப்ரகமுவ		638,240.80	638,240.80	638,240.80	100
4	வடமத்தி		1,739,246.75	1,739,246.75	1,739,246.75	100
5	தென்		99,000.00	99,000.00	99,000.00	100
6	வடக்கு		679,456.00	679,456.00	679,456.00	100
7	கிழக்கு		952,345.00	952,345.00	952,345.00	100
8	மேற்கு		2,809,808.38	2,809,808.38	2,809,808.38	100
9	ஊவா					100

		க்கு தொழிற்பயிற்சி வழங்குதல், பிள்ளைகளின் வாழ்க்கை திறனை மேம்படுத்துதல், மனிதகடத்தலை தடுத்தல் தொடர்பான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகளை நன்நடத்தை அலுவலர்களுக்காக நடத்துதல்.	218,435.00	218,435.00	218,435.00	
10	சிறுவர் அபிவிருத்தி நிலைய தரவுகளை மாகாண மட்டத்தில் கணணிமயப்படுத்துதல்.		117,412.50	117,412.50	117,412.50	100
11	சிறுவர் பயிற்சி மற்றும் உளவளத்துணை சேவைகள் தேசிய நிலைய (பரத்த) பிள்ளைகளுக்கு பயிற்சி வழங்குதல் / திறன் விருத்தி / ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நடத்துதல்.		304,580.00	304,580.00	304,580.00	100
12	மாகாண ஆணையாளர்கள் கூட்டம்		25,640.00	25,640.00	25,640.00	100
	மொத்தம்		**8,642,409.25**	**8,642,409.25**	**8,642,409.25**	

3.7 நிதி சாரா சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

சொத்துக்களின் குறியீடு	குறியீட்டு விபரம்	2021.12.31 திகதியில் பொருள் கணக்கெடுப்பு அறிக்கைக்கு அமைய மீதி	2021.12.31 திகதியில் நிதிநிலை அறிக்கைக்கு அமைய மீதி	எதிர்காலத்தில் கணக்கு வைக்கப்படவுள்ள	முன்னேற்றம் % ஆக அறிக்கை செய்தல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	32,345,000	32,345,000		100%
9152	இயந்திரங்கள்	46,571,822	46,571,822		100%
9153	காணி	2,655,000	2,655,000		100%
9154	கட்புலனாகா சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் வேலைகள்				
9180	குத்தகை வழங்கப்பட்ட சொத்துக்கள்				

3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. VOT/B/PCC/FA/2021/10
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2022 ජූනි 15 දින

අධ්‍යක්ෂ ජනරාල්

රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

පරිවාස හා ළමාරක්ෂක සේවා දෙපාර්තමේන්තුවේ 2021 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව.

1. මූල්‍ය ප්‍රකාශන

1.1 මතය

